

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.09.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் கிழக்குக் கடற்கரைச்சாலை, திருவான்மியூர் முதல் அக்கரை வரை உள்ள சாலையினை ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நீலங்கரை உதவி காவல் ஆணையர் ஏ.பாரத், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், பெருநகர சென்னை தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், சென்னை குடிநீர் வாரியம் தலைமைப் பொறியாளர் ஆர். கண்ணன், பெருநகர சென்னை திட்ட வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் பா.பாஸ்கரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு) விஜயராஜ், சென்னை மின்சார வாரிய செயற்பொறியாளர் ஏ.ராமு, பெருநகர சென்னை கோட்டப் பொறியாளர் ராஜகணபதி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



கண்டமங்கலம் ஒன்றியம் பரசுரெட்டிபாளையம் ஊராட்சி அலுவலகத்தை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்து ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றிய குழுத் தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றிய செயலாளர் வி.ஜி.பிரபாகரன், மாவட்ட வர்த்தக அணி கோல்டுவெங்கடேசன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ப.அன்பரசு, ஒன்றிய நிர்வாகிகள் அர.அசோக் குமார், பி.எம்.சரவணன், ஷீலா ராஜசேகர், முரளி, ஜே.வி.முருகன், சுந்தரமூர்த்தி, வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏழுமலை, ஆனந்த், மாணவர் அணி மணிகண்டன், கிளைச் செயலாளர்கள் மணிகண்டன், பார்த்திபன், ரவி, விஜயராகவன், பூவரசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டம் – குத்தம்பாக்கத்தில்

# ரூ.500 கோடியில் திரைப்பட நகருக்கான இடம் தேர்வு!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேட்டி!



சென்னை, செப்.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.7 கோடி செலவில் முடிக்கப் பட்டுள்ள குளிரூட்டப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்புத்தளம், மாணவர்களின் உணவருந்தும் அறை, படப்பிடிப்புக்கான நீதிமன்றம், சிறைச்சாலை உள்ளிட்ட பல்வேறு கட்டடப்பணிகளையும், ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள அதிநவீன படப்பிடிப்புத் தளங்களுக்கான இடங்களையும் நேற்று முன்தினம் (11.09.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்ளுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களின் கல்வி நலனுக்கான பல்வேறு அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் தற்போது செயல்பட்டு வரும் குளிர்சாதன படப்பிடிப்புத் தளத்தை போன்று மேலும் மூன்று புதிய அதிநவீன படப்பிடிப்புத் தளங்கள் ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை வாயிலாக அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான இடங்கள் இன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டியில் 06.01.2024 அன்று நடைபெற்ற "கலைஞர் 100" விழாவில், தென்னிந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அதிநவீன திரைப்பட நகரம் ரூ.500 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இவ்வறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு, திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சுமார் 152 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவாக தொடங்கப்படவுள்ளது என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வினைத் தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர் மரு.இரா.வைத்திநாதன் ஆகியோர் முன்னிலையில் பொதுப் பணித்துறை மற்றும் செய்தித்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் நீங்கலாக மாணவர் படப்பிடிப்புத் தளத்தினை புனரமைக்கவும், இப்பயிற்சி நிறுவன வளாகத்தினுள் பராமரிப்பின்றி உள்ள கட்டடங்கள், சுற்றுச்சுவர்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து அதனை புனரமைப்பதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை விரைவாக வழங்கிடவும் பொதுப்பணித்துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

இறுதியாக, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் 2021-2022ஆம் ஆண்டு முதல் 2023-2024ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்புகளின் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ளப் பணிகளை விரைவுபடுத்திடுமாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் எஸ்.செல்வராஜ், மு.பா.அன்புச்சோழன், பொதுப்பணித் துறை சென்னை மண்டல முதன்மை பொறியாளர் (கட்டடங்கள்), எஸ்.மணிவண்ணன், கூடுதல் முதன்மை பொறியாளர் (மின்) திருமதி சி. தில்லைக்கரசி, கண்காணிப்புப் பொறியாளர் எஸ்.முத்தமிழ் அரசு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர்கள் மு.மேக வர்ணம், கு.தமிழ்செல்வராஜன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன முதல்வர் (மு.கூ.பொ) ஜெ.வே.மோகனகிருஷ்ணன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் எஸ்.விஜய் ஆனந்த் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த எழும்பூர் நேரு பூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11.09.2024) வழங்கினார். இந்நிகழ்வின் போது சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே உடனிருந்தார்.

## கலாநிதி வீராசாமி எம்.பி. ஏற்பாட்டில் – ஸ்டான்லி மருத்துவமனைக்கு

# எம்.ஆர்.எப். நிறுவனம் ரூ.51 லட்சத்தில் மருத்துவ உபகரணங்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் வழங்கப்பட்டது!

சென்னை, செப்.13-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் எம்.ஆர்.எப் (MRF) நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 51,30,000/ (51 லட்சத்து 30 ஆயிரம் மட்டும்) மதிப்புள்ள அறுவை சிகிச்சை மைய மேசை, மற்றும் அல்ட்ரா சோனோகிராம் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் மருத்துவ உபகரணங்களை மருத்துவமனை நிர்வாகத்திடம் அர்ப்பணித்தார் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வழங்கினார்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., மேயர் திருமதி. பிரியா ராஜன், ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி, பகுதிக் கழகச் செயலாளர் இரா. செந்தில் குமார், எம்.ஆர்.எப் நிறுவன பொது மேலாளர் ஜேக்கப் சாக்கோ, ஜோசப் வி செரியன் (Deputy Plant Head MRF), என்.நந்தகுமார் (PRO MRF) ஜி.கஜேந்திரன் (CSR Coordinator MRF) மாவட்டக் கழக பகுதிக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், கலந்து கொண்டனர்.

